செ.வெ. எண் : 456 20/07/2007

# பத்திரிக்கை செய்தி

## மாநில சாலைப் பாதுகாப்புக் குழு கூட்டம்

அரசாணைப்படி புனரமைக்கப்பட்ட மாநில சாலைப்பாதுகாப்புக் குழுவின் முதல் கூட்டம் குழுவின் தலைவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 20.07.2007-ந் தேதி காலை 11.00 மணியளவில நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். தமிழ்நாடு தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல் துறைத் தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் மற்றும் சென்னை பெருநகர காவல்துறை கூடுதல் ஆணையர், (போக்குவரத்து) ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். உள்துறை செயலாளர் அவர்களின் வரவேற்புரையுடன் கூட்டம் துவங்கியது.

சாலை விபத்துக்களையும் விபத்தில் உயிரிழப்புக்களையும் குறைக்கும் நோக்குடன் ஒரு "சாலைப்பாதுகாப்பு கொள்கை" அரசு வெளியிட்டுள்ளது. 2006ஆம் ஆண்டின் விபத்து எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு 2013-ஆம் ஆண்டில் 20 சதவீத விபத்துக்களை குறைக்கும் வழிமுறைகளைக் காண்பதே இந்த கொள்கையின் முக்கிய நோக்கம் ஆகும். ஒருங்கிணைந்த பல்வேறுதுறை நடவடிக்கைகள் மூலம் இக் கொள்கை செயலாக்கம் செய்யப்படும்.

21.4.07 மற்றும் 22.4.07-ஆம் தேதியில் கோவையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக்குழுவின் 10வது கூட்டம் மற்றும் கருத்தரங்கின்போது சாலைப்பாதுகாப்பு மற்றும் உயிர்காப்பு நடவடிக்கைகள் குறித்து கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டன.

தமிழகத்தில் பெருகிவரும் வாகனப் பெருக்கம் சாலைவிபத்திற்கு முக்கிய காரணமாக இருப்பினும்,ஒட்டுனர்கள் மற்றும் சாலையைப் பயன்படுத்துவோரின் தவறுகள்தான் தவிர்க்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டது. வாகன ஒட்டுனர்களுக்கு உரிய புத்தாக்கப் பயிற்சிகள், பொதுமக்களுக்கு தொடர்ச்சியான சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு, திறமையானப் பயிற்சிக்குப் பின் ஒட்டுநர் உரிமம் வழங்குதல் ஆகியவை இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. காவல்துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மூலம் இத்திட்டம் விரைவில் செயலாக்கம் செய்யப்படவுள்ளது.

தமிழகத்தில் செயல்படாமல் இருந்து வரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் 18 ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சென்னை குரோம்பேட்டையில் ஒருங்கிணைந்த ஓட்டுநர் பயிற்சி மையம் துவங்க மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்றும் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

சாலைவிதிகளை மீறும் வாகனங்களை காவல் துறையினர் முறையாக சோதனை செய்வதுடன் போக்குவரத்துத் துறையில் வாகன பரிசோதகர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

மாண்புமிகுநெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தமது சிறப்புரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி விபத்துக்களை முற்றிலும் தவிர்க்கும் நோக்குடன் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிச் சாலையாகவும், மாநில நெடுஞ்சாலைகள் இரண்டு வழிச் சாலைகளாகவும் அமைத்திட இந்த ஆண்டிலேயே வழிவகைச் செய்யப்படும் எனவும் சாலைகளில் வாகனங்களை நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறுகளும், விபத்துகளும் ஏற்படாவண்ணம் சாலை ஓரங்களில் நிறுத்துமிட வசதி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகளை இணைக்கும் குறுக்குச் சாலைகளில் வேகத் தடைகளை ஏற்படுத்தி சாலை சந்திப்புகளில் நிகழும் விபத்துக்களை தவிர்த்திடும் நடவடிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டன. சாலைகளில் பக்கவாட்டு தளங்களை (Berms) சமன்படுத்தி இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் பாதுகாப்பாகச் செல்லும் விதத்தில் அமைக்கப்படும். மேலும் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகள் வாகனத்தின் முகப்பு விளக்குகளை டிம், பிரைட் செய்தால் ஓட்டுநர்களின் கண் அழற்சியும், சோர்வும் தவிர்ப்பதுடன் விபத்துக்களும் குறையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குரிய அனைத்து வழிமுறைகளையும் காவல் துறையுடன் இணைந்து போக்குவரத்து மற்றும் இதர துறைகள் செயலாற்றும் வழி வகைகள் விவாதிக்கப்பட்டன. போக்குவரத்து ஆணையர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

வெளியீடு : இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை-9.